بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 1.5.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையின் சம்பவங்களை எடுத்துக்கூறும் போது எந்த அளவுக்கு நுணுக்கமாக அதிலிருந்து கருத்தை எடுக்கின்றார்கள் என்றால் ஒரு நம்பிக்கையாளருக்கு ஈமானின் சரியான பாதையின் பக்கம் வழிகாட்டி அவரை இறைவன் மற்றும் மார்க்கத்தை சரியான முறையில் அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவராகவும் அதன் அறிவை உடையவராகவும் ஆக்குகின்றார்கள்.

ஒரு முறை அன்னார் தனது ஓர் உரையில் ஆயத்துல் குர்ஸிக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தார்கள். لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ مَنْ ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ அதாவது அல்லாஹ் கூறுகின்றான். உங்களுடைய இறைவன் எப்படிப்பட்ட இறைவன் என்றால் வானம் மற்றும் பூமியிலுள்ள அனைத்தும் அவனுக்கே உரியதாகும். அவனுக்கு எதிராக நீங்கள் வேறு யாரை உங்களுடைய எஜமானனாக ஆக்க முடியும் ? நாங்கள் இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்கவில்லை என்றும் அல்லாஹ் அல்லாதவர்களை வணங்கவில்லை என்றும் ஆனால் அவர்களிடம் எங்களுடைய தேவைகளை கேட்கின்றோம். அவர்கள் இறைவனுக்கு நெருக்கமானவர்கள் ஆவார்கள். அவர்கள் இறைவனிடம் எங்களுக்கு சிபாரிசு செய்வார்கள் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

அன்னார் கூறுகிறார்கள். என்னுடைய அனுமதியின்று யாரும் சிபாரிசு செய்ய முடியாது என்று இறைவன் கூறுகின்றான். இந்த காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விட பெரிய மனிதர் வேறு யார் இருக்கிறார். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருமுறை நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களுடைய மகன் அப்துர் ரஹீம் கான் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது துஆ செய்தார்கள். அவர் பிழைக்க மாட்டார் என்று இல்ஹாம் இறங்கியது. நவாப் சாஹிப் அவர்கள் தன்னுடைய அனைத்தையும் விட்டுவிட்டு காதியான் வந்துள்ளார்கள். மகன் மரணித்து அவர்களுக்கு சோதனை வந்து விடக்கூடாதே என்ற எண்ணம் அன்னாருக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக அன்னார், இறைவா ! நான் இந்த பையனின் ஆரோக்கியத்திற்காக சிபாரிசு செய்கின்றேன் என்று இறைவனிடம் கூறினார்கள். அதற்கு مَنْ ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ என்ற இல்ஹாம் இறங்கியது. அதாவது என்னுடைய அனுதியின்றி சிபாரிசு செய்ய நீ யார் ? என்று இறைவன் கூறினான்.

பாருங்கள் ! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தார்கள். 1300 வருடங்களாக உலகம் அவர்களை எதிர்பார்த்திருந்தது. அவர் கூட இறைவனிடம் சிபாரிசு செய்யும் போது என்னுடைய அனுமதியின்றி சிபாரிசு செய்ய நீ யார் ? என்று அல்லாஹ் கூறுகின்றான்.

ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள். எனக்கு இந்த இல்ஹாம் இறங்கிய போது நான் விழுந்து விட்டேன். உடலில் ஒரு நடுக்கம் ஆரம்பித்துவிட்டது. எனது உயிர் போய் விடும் போல் தோன்றியது. ஆனால் இந்த நிலைமை ஏற்பட்ட போது உனக்கு சிபாரிசு செய்ய அனுமதி உள்ளது என்று அல்லாஹ் கூறினான். அப்போது அன்னார் சிபாரிசு செய்தார்கள். மேலும் அப்துர் ரஹீம் கான் அவர்கள் ஆரோக்கியமாகி விட்டார்கள். இது அல்லாஹ்வினுடைய அருளாகும். துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிபாரிசு செய்வதற்கான அனுமதி கிடைத்தது. ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் போன்ற மனிதரிடம் என்னுடைய அனுமதியின்றி சிபாரிசு செய்வதற்கு நீ யார் என்று அல்லாஹ் கூறும் போது தம்மை பெரியவர் என்று கூறித் திரிபவர்களுக்கு எவருக்காகவாவது சிபாரிசு செய்வதற்கு என்ன தகுதி இருக்கின்றது.

ஹதீஸிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் போது தான் அன்னார் சிபாரிசு செய்வார்கள்.

பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு எவ்வாறு தன்னுடைய வல்லமையின் அற்புதங்களை காட்டி வந்தான் என்பதற்கு ஒரு உதாரணத்தை கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு முறை அன்னாருக்கு இருமல் தொந்தரவு இருந்தது. அன்னாருக்கு மருந்து கொடுக்கக்கூடிய பொறுப்பு என்னுடையதாக இருந்தது. நீங்கள் இதை சாப்பிடாதீர்கள். அதை சாப்பிடாதீர்கள் என்று கூறியும் வந்தேன். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய மருந்தும் தயார் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆங்கிலேயே மருந்தும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் நோய் அதிமாகிக் கொண்ட இருந்தது. இது 1907 ல் நடந்த சம்பவமாகும். முர்தத் ஆகி சென்ற அப்துல் ஹகீம் என்பவர் அன்னாருக்கு ஏற்பட்டிருந்த இருமல் தொந்தரவை அறிந்து மிர்ஸா சாஹிப் காச நோயால் பாதிக்கப்பட்டு மரணித்து விடுவார் என்று எழுதினார். எனவே, தவறாகக்கூட அவருக்கு மகிழ்ச்சி அடைவதற்கான எவ்வித வாய்ப்பும் கிடைக்கக்கூடாது என்ற எண்ணமும் ஏற்பட்டது. ஆனால் அன்னாருக்கு இருமல் தொந்தரவு மிக அதிகமாக இருந்தது. சில சமயம் எந்த அளவிற்கு நீண்டதாக இருந்தென்றால் மூச்சு நின்று

விடும் போல் தோன்றியது. அப்படிப்பட்ட நிலைமையில் வெளியிலிருந்து ஒரு நண்பர் வந்தார். அவர் அன்பளிப்பாக சில பழங்களை கொண்டு வந்திருந்தார். நான் அவற்றை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னால் கொண்டு சென்று வைத்து விட்டேன். பிறகு அதிலிருந்து ஒன்றை அநேகமாக வாழைப் பழத்தை எடுத்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நான் அன்னாருக்கு மருந்து கொடுத்து வந்த காரணத்தினாலோ அல்லது எனக்கு பாடம் கூற வேண்டும் என்பதற்காகவோ இது இருமலுக்கு எவ்வாறு இருக்கும் என்று கேட்டார்கள். நான் சரியில்லை என்று கூறினேன். ஆனால் அன்னார் சிரித்தார்கள். பிறகு அதை உரித்து அதை சாப்பிட ஆரம்பித்தார்கள். இருமல் மிக அதிகமாக இருக்கின்றது. இது இருமலுக்கு நல்லது கிடையாது என்று நான் மீண்டும் கூறினேன். அன்னார் மீண்டும் புன்னகைத்தவாறு சாப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள். நான் எனது அறிவீனத்தின் காரணமாக, இதை சாப்பிடக் கூடாது என்று மீண்டும் கூறினேன். அதற்கு அன்னார் மீண்டும் புன்னகைத்தவாறு இருமல் நீங்கிவிட்டது என்று எனக்கு இல்ஹாம் இறங்கியுள்ளது என்று கூறினார்கள். அப்போதே இருமல் குணமாக ஆரம்பித்தது. அப்போது எந்த மருந்தும் உபயோகப்படுத்தவில்லை. எவ்வித பத்தியத்தையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, பத்தியத்திற்கு எதிராக செயல்பட்டார்கள். பிறகும் கூட இருமல் நீங்கிவிட்டது. இதற்கு முன்பு ஒரு மாத காலங்கள் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் இருமல் நீங்கவில்லை. இது இறைவனுடைய செயலாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் இந்த சம்பத்தின் உதாரணத்திற்கு பிறகு ஒரு உதாரணத்தை கூறினார்கள். அது ஈமானுக்கும் புத்துணர்வை அளிக்கின்றது. அது லேக்கராமுடன் தொடர்புடையதாகும். இறைவன் விரும்பினால் ஆரோக்கியத்திற்கான அனைத்து காரணிகளும் இருந்தும் கூட நோய் உருவாக முடியும் என்பதற்கு லேக்கராமின் இந்த சம்பத்தையும் உதாரணமாக கூறலாம். லேக்கராமின் விவகாரத்தில் பெருநாளிலிருந்து இரண்டாவது நாள் அவன் மரணிப்பான் என்று இல்ஹாம் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் கூறினான். வெளியூரில் இருப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தும் கூட அவர் லாஹூர் வந்து விட்டார். மேலும் விதிக்கப்பட்ட நேரத்தில் கொலையும் செய்யப்பட்டான். இது ஆரோக்கியத்திற்கான ஏற்பாடுகள் இருந்தும் மனிதன் அழிய முடியும் என்பதற்கான உதாரணமாகும். ஆக, அல்லாஹ் மனிதனின் பணியில் தலையிடுகின்றான். அவன் எவ்வாறு விரும்புகின்றானோ அவ்வாறு தனது வல்லமையினை காட்டுகின்றான்.

ஸாஹிப் ஸாதா மிர்ஸா முபாரக் அஹ்மது சாஹிப் பற்றி கூறப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்.

எங்களுடைய ஒரு இளைய சகோதரர் இருந்தார். அவருடைய பெயர் முபாரக் அஹ்மத் ஆகும். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மிகவும் நேசத்திற்குரியவராக இருந்தார். எனக்கு நினைவு இருக்கிறது. நாங்கள் சிறுவர்களாக இருந்த போது எங்களுக்கு கோழி வளர்க்கும் ஆர்வம் உருவானது. சிறிய வயது ஆர்வத்தின் அடிப்படையில் நாங்கள் காலையிலேயே சென்று கோழிக் கூண்டுகளை திறந்து முட்டைகளை எண்ணுவோம். பிறகு உன்னுடைய கோழி இவ்வளவு முட்டை இட்டுள்ளது. என்னுடைய கோழி இவ்வளவு முட்டை இட்டுள்ளது என்று பெருமையாக ஒருவர் மற்றவருடன் போட்டி போடுவோம். எங்களுடைய இந்த ஆர்வத்தில் மர்ஹூம் முபாரக் அஹ்மது அவர்களும் இணைந்து கொள்வார்கள். எதார்த்தமாக அவர் ஒருநாள் நோய்வாய்ப்பட்டுவிட்டார். (சியால்கோட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி அன்னாரை கவனித்து வந்தார்கள். அவர்கள் தாதி என்று அழைக்கப்பட்டார்கள். அவரை தாதி என்றே கூறுவோம்.)

மர்ஹூம் முபாரக் அஹ்மது நோயுற்ற போது, இவர் கோழிகளுக்கு பின்னார் செல்கின்றார். எப்போதும் அங்கேயே இருக்கின்றார். அது அசுத்தமான இடமாகும் என்று இந்த தாதி கூறியது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரை சென்றடைந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டதும் ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களிடம் கோழிகளை கொண்டு வரச் சொல்லி அவைகளை எண்ணி இந்த குழந்தைகளுக்கு அதற்காக விலையை கொடுத்து விட்டு கோழிகளை அறுத்து சாப்பிட்டு விட வேண்டும் என்று கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முபாரக் அஹ்மது அவர்கள் மிகவும் பிடித்தமானவராக இருந்தார். ஆனால் எவரை அதிகமாக கவனித்து வந்தார்களோ, அன்பு செலுத்தி வந்தார்களோ அந்த மகன் இறந்த போது அப்போதைய நிலைமையின் வரைபடத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

கூறுகிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எங்களுடைய இளைய சகோதரர் முபாரக் அஹ்மதோடு மிகவும் அன்பு இருந்தது. அவர் நோய்வாய்ப்பட்ட போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த அளவிற்கு கடின உழைப்பு மற்றும் கவனத்துடன் சிகிச்சை அளித்தார்கள் என்றால் முபாரக் அஹ்மது மரணித்து விட்டால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மிகக் கடினமாக துக்கம் ஏற்பட்டு விடும் என்று சிலர் கருதினர். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மிகவும் சகிப்புத்தன்மை உடையவர்களாகவும், வீரராகவும் இருந்தார்கள். மர்ஹூம் முபாரக் அவர்கள் மரணித்த நாளன்று காலையில் தொழ வைத்து விட்டு அன்னார் முபாரக் அஹ்மதை பார்ப்பதற்காக வந்தார்கள். அப்போது முபாரக் அஹ்மதிற்கு மருந்து கொடுப்பது அல்லது அவரை கவனித்து வருவது என்னுடைய பணியாக இருந்தது. நானே தொழுகைக்குப் பிறகு முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை என்னோடு அழைத்து வந்தேன். நான் இருந்தேன். ஹஸ்ரத் முதலாவது

கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இருந்தார்கள். டாக்டர் மிர்ஸா யாகூப் பேக் சாஹிப் இருந்தார்கள். மேலும் அநேகமாக கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிபும் இருந்தார்கள். முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் முபாரக் அஹ்மதை பார்ப்பதற்காக வந்த போது நிலைமை நன்றாகவே இருக்கின்றது. குழந்தை தூங்கி விட்டான் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். ஆனால் உண்மையில் அது இறுதி நேரமாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நான் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை அழைத்து வந்த போது முபாரக் அஹ்மதின் தலை வடக்கு பக்கமாகவும், கால்கள் தெற்கு பக்கமாகவும் இருந்தன. ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இடது பக்கம் நின்று கைநாடியை பிடித்தார்கள். ஆனால் அன்னாருக்கு துடிப்பு தெரியவில்லை. அப்போது முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், ஹுஸூர் கஸ்தூரியை எடுத்து வாருங்கள் என்று கூறினார்கள். பிறகு கையை முழங்கையில் வைத்து ஒருவேளை அங்கு துடிப்பு இருக்கலாம் என்று உணர முயற்சித்தார்கள். ஆனால் அங்கும் துடிப்பு தென்படவில்லை. பிறகு அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்த்து, ஹுஸூர் விரைவாக கஸ்தூரியை கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். பிறகு தன்னுடைய கையை கக்கத்திற்கு அருகே கொண்டு சென்று துடிப்பை உணர முயற்சித்தார்கள். அங்கும் துடிப்பு தென்படாத போது பயந்தவாறு, ஹுஸூர் விரைவில் கஸ்தூரியை கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். இவ்வளவு நேரத்திற்குள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சாவி கொத்திலிருந்து சாவியைத் தேடி பூட்டைத் திறந்து கொண்டிருந்தார்கள். இறுதியாக மவ்லவி சாஹிப் அவர்கள் பயந்தவாறு, ஹுஸூர் கஸ்தூரியை விரைவாக கொண்டு வாருங்கள் என்று கூறிய போது முபாரக் அஹ்மது மரணித்து விட்டால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடினமான துக்கம் ஏற்படும் என்று எண்ணி முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வீரமுடையவர்களாக இருந்தும் அன்னாருடைய பாதங்கள் நடுங்கி விட்டன. முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களால் நிற்க முடியவில்லை. தரையில் அமர்ந்து விட்டார்கள். துடிப்பு இதயத்திற்கு அருகே இருக்கலாம். கஸ்தூரியால் அதை மீண்டும் கொண்டு வந்து விடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால், அவர்களுடைய குரலிலிருந்து இந்த நம்பிக்கை போய் விட்டது என்று தோன்றியது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாருடைய குரலின் நடுக்கத்தை உணர்ந்து இது முபாரக் அஹ்மதின் இறுதி நேரம் என்பதை உணர்ந்து கொண்டார்கள். அன்னார் பெட்டியை திறப்பதை நிறுத்தி விட்டு கூறினார்கள். மவ்லவி சாஹிப், அநேகமாக பையன் இறந்து விட்டான். நீங்கள் ஏன் இந்த அளவிற்கு பயந்து விட்டீர்கள். இது அல்லாஹ்வினுடைய அமானத் ஆகும். அவன் நமக்கு வழங்கியிருந்தான். இப்போது அவன் தனது அமானத்தை எடுத்து சென்று விட்டான். அதன் காரமணாக நமக்கு அவன் மீது என்ன புகார் இருக்க முடியும் ? பிறகு கூறினார்கள். நான் இவருக்கு அதிகமான தொண்டாற்றி இருக்கின்றேன். அதனால் எனக்கு அதிக கவலை ஏற்படலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள். சேவை செய்வது எனது கடமையாகும். அதை நான் செய்து விட்டேன். இப்போது அவர் மரணித்த போது நான் அல்லாஹ்வின் விருப்பத்தோடு பொருந்தியவர்களாக இருக்கின்றோம். அப்போதே அன்னார் அமர்ந்து நண்பர்களுக்கு கடிதம் எழுத ஆரம்பித்தார்கள்.

பிறகு இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பிறிதோரிடத்தில் கூறுகிறார்கள். காதியானின் மக்களைப் பார்த்து கூறுகிறார்கள். இங்கு இருக்கக்கூடியவர்கள் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் மற்றும் முபாரக் அஹ்மது நோய்வாய்ப்பட்டிருக்கும் போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அவர்களின் சிசிச்சை தொடர்பாக எந்த அளவுக்கு கவனம் இருந்தது என்பதைப் பார்த்திருப்பார்கள். பார்க்கக்கூடியவர்களுக்கு அன்னார் இவர்களுடைய வாழ்க்கையையே தனது இயக்கத்தின் முன்னேற்றமாக கருதுவதாக தென்பட்டிருக்கும். அந்த நாட்களில் எவ்வாறு சிசிச்சை அளிக்க வேண்டும் ? என்ன சிகிச்சை வழங்க வேண்டும் ? என்ற பேச்சைத் தவிர வேறு பேச்சு இருக்கவில்லை. ஆனால் அன்னாருடைய மரணத்தின் போது என்ன நடந்தது ? இதுவேயாகும். அதாவது ஒரே நொடியில் அன்னாருடைய நிலைமை எப்படி மாறிவிட்டதென்றால் வியப்பு ஏற்பட்டது. காலையிலிருந்து மாலை வரை அவர்களுடைய சிகிச்சைப் பற்றிய உணர்வு இருந்தது. (மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் மற்றும் முபாரக் அஹ்மது நோயுற்ற போது) அல்லது அல்லாஹ் அவருடைய மரணம் பற்றி முன்பாகவே கூறியிருந்தான் என்பது தொடர்பாக சிரித்தவாறு மலர்ந்த முகத்துடன் உரை நிகழ்த்தினார்கள்.

பிறகு அன்னார் இந்த சம்பவத்தை இன்னொரு இடத்தில் இவ்வாறும் கூறுகின்றார்கள். முபாரக் அஹ்மதின் மரணத்திற்குப் பிறகு அன்னார் வீட்டிற்கு வெளியே சென்ற போது அங்கு மக்கள் அமர்ந்திருந்தார்கள். அன்னாரும் வெளியே சென்று அமர்ந்து உரை நிகழ்த்தினார்கள். அதில் இது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஒரு சோதனையாகும். மேலும் நமது ஜமாஅத் இது போன்ற சோதனைகளில் துக்கமடையக் கூடாது. பிறகு கூறினார்கள். முபாரக் அஹ்மது தொடர்பாக இன்ன நேரத்தில், இவர் சிறிய வயதிலேயே எடுத்துக் கொள்ளப்படுவார் என்று இல்ஹாம் இறங்கியது. எனவே, இறைவனுடைய அடையாளம் பூர்த்தி அடைந்ததால் இது மகிழ்ச்சிக்குரிய தருணமாகும் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்வத்தை கூறுகிறார்கள்.

அல்லாஹ்வினுடைய பரிபாலித்தல் என்ற பண்பு வெளிப்படுவதற்காக படைப்பினங்களுக்கு உடல் ரீதியான தொண்டும் செய்ய வேண்டும் என்பது தொடர்பானதாகும். கூறுகிறார்கள். ஒரு காட்சி எனக்கு ஒருபோதும் மறக்காது. அப்போது நான் சிறுவனாக இருந்தேன். 16, 17 ஆக என்னுடைய வயது இருந்தது. எங்களுடைய ஒரு இளைய சகோதரி

ஒரு சில மாதங்களில் மரணித்து விட்டார்கள். எந்த கபருஸ்தான் தொடர்பாக அஹ்மதிகள் இங்கு அடக்கப்பட முடியாது என்று அஹராரிகள் கூறினார்களோ அந்த கபருஸ்தானுக்கு எடுத்துச் சென்றோம். ஜனாஸாவிற்குப் பிறகு உடலை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய கைகளில் தூக்கினார்கள். அப்போது இங்கு பால் கடை வைத்திருந்த மிர்ஸா இஸ்மாயீல் பேக் சாஹிப், ஹுஸூர் உடலை என்னிடம் கொடுங்கள். நான் தூக்குகின்றேன் என்று கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திரும்பி அவரைப் பார்த்து, இது என்னுடைய மகளாவாள். மகள் என்ற அடிப்படையில் உடல் ரீதியாக இவளுக்கு நான் செய்யக்கூடிய தொண்டு மேலும் இறுதித் தொண்டு என்னவாக இருக்குமென்றால், நானே இதை தூக்கி செல்ல வேண்டும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதிலிருந்து என்ன கருத்தை எடுக்கிறார்கள் என்றால், கூறுகிறார்கள்.

ரப்புல் ஆலமீன் என்ற பண்பை வெளிப்படுத்தக் கூடியவராக ஆக விரும்பினால் படைப்பினத்திற்கு உடல் ரீதியான தொண்டு செய்வதும் அவசியமாகும். நீங்கள் மார்க்கத் தொண்டிற்காக உங்களுடைய அனைத்து சொத்துக்களையும் வழங்கி விட்டாலும், உங்களுடைய முழு வருமானத்தையும் இஸ்லாத்தை பரப்புவதற்காக செலவிட்டாலும் நீங்கள் மலிகிய்யத் என்ற பண்பை வெளிப்படுத்தக் கூடியவராக ஆகிவிடுவீர்கள். ஆனால் ரப்புல் ஆலமீன் என்ற பண்பை வெளிப்படுத்துபவராக ஆகமாட்டீர்கள். ஏனென்றால், ரப்புல் ஆலமீன் என்ற பண்பை வெளிப்படுத்துவதற்கு நீங்கள் உங்களுடைய கைகளால் வேலை செய்ய வேண்டும். மேலும் ஏழைகளுக்கு தொண்டு செய்வதில் மூழ்கி இருக்க வேண்டும் என்பது அவசியமாகும்.

ஆக, இதுவொரு அழகிய விளக்கமாகும். ரப்புல் ஆலமீன் என்ற பண்பை வெளிப்படுத்தக் கூடியவர் ஆவதற்கு நம்மவர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் தன்னுடைய கைகளால் தொண்டு செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். சிந்தித்துப் பார்த்தால் இதற்கு மிகப் பெரிய விளைவுகள் இருக்கின்றன. அவைகள் சமுதாயங்களை ஒன்றோடொன்று வலுவாக இணைத்து விடுகின்றன. மேலும் சமூகத்தின் ஒவ்வொரு அங்கமும் இதன்படி செயல்பட்டால் அது அழகிய சமூகமாக ஆகிவிடுகிறது.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் மீதிருந்த நம்பிக்கை, துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல், மேலும் தன்னுடைய உண்மைத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கை இருந்தது தொடர்பான ஒரு சம்பவத்தை கூறுயவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்தில் ஒருமுறை கபூர்தலாவைச் சார்ந்த அஹ்மதிகளுக்கும், அஹ்மதி அல்லாதவர்களுக்கும் இடையே அங்குள்ள ஒரு பள்ளிவாசல் தொடர்பாக வழக்கு ஏற்பட்டது. இந்த வழக்கு எவரிடம் இருந்ததோ அந்த நீதிபதி எதிர்ப்பான முறையை கையாண்டார். அதன் காரணமாக கபூர்தலா ஜமாஅத் பயந்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு துஆவிற்காக கடிதம் எழுதினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த கடிதத்திற்கு பதிலில், நான் உண்மையாளன் என்றால் பள்ளிவாசல் உங்களுக்கு கிடைத்து விடும் என்று எழுதினார்கள். ஆனால் மறுபக்கம் நீதிபதி எதிர்ப்பை தொடர்ந்தார். இறுதியில் அஹ்மதிகளுக்கு எதிராக அவர் தீர்ப்பையும் எழுதி விட்டார். ஆனால், மறுநாள் தீர்ப்பை கூறுவதற்காக நீதிமன்றத்திற்கு வருவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் போது அவர் தன்னுடைய வேலைக்காரனிடம் தனது காலணிகளை போட்டுவிடுமாறு கூறினார். வேலைக்காரர் ஒன்றை போட்டுவிட்டு இரண்டாவதையும் போட்டுக் கொண்டிருக்கும் போது டக் என்று சத்தம் வந்தது. அவர் மேலே பார்த்த போது நீதிபதியின் இதயத் துடிப்பு நின்று விட்டது. அவர் இறந்த பிறகு இன்னொரு நீதிபதி நியமிக்கப்பட்டார். அவர் முதல் தீர்ப்பை மாற்றி ஜமாஅத்திற்கு சாதகமாக தீர்ப்பு எழுதினார். இது நண்பர்களுக்கு மிகப்பெரிய ஒரு அடையாளமாக நிரூபணமானது. அவர்களினுடைய ஈமான் வானம் வரை சென்றடைந்தது.

சுருக்கமாக, அல்லாஹ்வினுடைய நடைமுறை என்னவென்றால், அவன் தனது நபிமார்களின் மூலமாக தொடர்ந்து மறைவான செய்திகளை தெரிவிக்கின்றான். அது பூர்த்தி அடையும் போது நம்பிக்கையாளரின் ஈமான் மேலும் அதிகமாகிறது. அல்லது மறைவான செய்தியின் காரணமாக எவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார்களோ அவர்களுடைய ஈமான் எந்த அளவிற்கு வலுவானதென்றால் மற்றவர்கள் மரணத்தைக் கண்டு அழுகிறார்கள். ஆனால் சஹாபாக்களில் எவருக்காவது உயிரை துறக்கும் சந்தர்ப்பம் வந்தால் அவர்கள் சந்தோஷத்தால் குதித்தனர். மேலும் فزت ورب الكعبة அதாவது கஃபாவின் இறைவனின் மீது ஆணையாக நான் வெற்றி பெற்று விட்டேன் என்று கூறுனார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய ஒரு ஆன்மீகக் காட்சி ஒரு சில நிமிடங்களில் பூர்த்தி அடைந்ததை கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

விழித்திருக்கும் போதே ஒரு காட்சி காட்டப்படும் போது அது விளக்கம் தேவையுடையதாக இருப்பதில்லை. எவ்வாறு காட்சியில் காட்டப்படுகின்றதோ அவ்வாறே பூர்த்தி அடைந்து விடுகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய ஆன்மீகக் காட்சியில் இதற்கு உதாரணங்கள் கிடைக்கின்றன.

ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆன்மீகக் காட்சியை கண்டார்கள். முபாரக் அஹ்மது அவர்கள் விரிப்பிற்கு அருகில் விழுந்து கிடக்கின்றார்கள். அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இந்த

ஆன்மீக காட்சி கண்டு 3 நிமிடங்கள் கூட கழிந்திருக்காது. விரிப்பிற்கு அருகே நின்று கொண்டிருந்த முபாரக் அஹ்மது அவர்கள் கால் வழுக்கி கீழே விழுந்தார். அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மேலும் அவருடைய துணி ரத்தத்தால் நிறைந்து விட்டது.

பிறகு காதியானுடைய ஆரம்பகால நிலைமையின் வரைபடம் மற்றும் காதியானின் முன்னேற்றம் மற்றும் ஜமாஅத்தினுடைய முன்னேற்றம் பற்றி கூறியவாறு கூறுகின்றார்கள்.

ஒரு காலம் எப்படிப்பட்ட காலமாக இருந்ததென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு எந்த மனிதரும் இருக்கவில்லை. பிறகு எப்படிப்பட்ட காலம் வந்தது என்றால் அன்னாரோடு ஆயிரக்கணக்கான மக்கள் இருந்தனர். இப்போது இலட்சங்களை எட்டி விட்டது. பிறகு ஒரு காலத்தில் பஞ்சாபில் கூட அன்னாரை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட ஒருவர் கூட இருக்கவில்லை. இப்போது இந்தியாவில் மட்டுமின்றி உலகின் அனைத்து கண்டங்களிலும் அஹ்மதிகள் பரவி விட்டனர். இது உண்மையாகும். அதாவது உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இவ்வளவு பேர் எங்கிருந்து விந்து விட்டனர். அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தை உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இவ்வளவு பேர் எங்கிருந்து வந்து விட்டனர். இப்போது அல்லாஹ்வின் அருளால் நாடுகளுக்கு நாடுகள் அஹ்மதிகளாகிக் கொண்டு இருக்கின்றனர். அல்லது அஹ்மதிய்யத் அங்கு பரவிக் கொண்டு இருக்கிறது.

ஆக, இந்த சம்பவங்கள் நிச்சயமாக ஈமான் மற்றும் நம்பிக்கையை அதிகமாக்கக் கூடியவையாகும். அல்லாஹ் நம் அனைவரையும் ஈமானிலும், நம்பிக்கையிலும் முன்னேறச் செய்வானாக. மேலும் நாம் அனைவரும் ஜமாஅத்திற்கு பலனளிக்கக்கூடிய இருப்பாக ஆவோமாக. ஆமீன்.

தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கராச்சியைச் சார்ந்த செய்யது மஹ்மூத் அஹ்மது ஷா சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய நஸீம் மஹ்மூத் சாஹிபா அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். அவர்கள் 27 ஏப்ரல் 2015 அன்று 58 வது வயதில் கேன்ஸரின் காரணமாக கராச்சியில் வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மேலும் மர்ஹூமாவிற்காக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ் மர்ஹூமாவின் பதவிகளை உயர்த்துவானாக. அவர்களுடைய குழந்தைகளுக்கு அன்னாரின் நன்மையை தொடர்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் அன்னாரின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 1.5.15
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516